இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 277 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 05 – செவ்வாய்க்கிழமை 19 மே 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 277 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 05 - Tuesday 19 May 2026 - Dak 8 Pages ₹ 5.00

## நம்பிக்கையோடு பணியாற்றுங்கள்;

# மீண்டும் நாம்தான் ஆட்சிக்கு வருவோம்!

## பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. இல்ல மணவிழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரையில் உறுதி!

**தஞ்சை, மே 19 -**

**“நம்பிக்கையோடு பணியாற்றுங்கள், மீண்டும் நாம்தான் ஆட்சிக்கு வருவோம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சையில் நடைபெற்ற பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., இல்ல மணவிழாவில் உரையாற்றும்போது கூறினார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூரில் நேற்று நடைபெற்ற பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களின் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

பூண்டி கலைச்செல்வன் - திருமதி மல்லிகா ஆகியோரின் குமாரி திருநிறைச்செல்வி டாக்டர் கலையழகி அவர்களுக்கும், நந்தகோபால் மேற்கொண்டார் - திருமதி சோபனா ஆகியோரின் குமாரன் திருவளர்ச்செல்வன் டாக்டர் ராம்பாலாஜி அவர்களுக்கும், நம்முடைய அன்பான வாழ்த்துக்களோடு இந்த மணவிழா நிகழ்ச்சி நிறைவேறி இருக்கிறது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நண்பர் என்ற பெருமையைப் பெற்ற, நினைவில் வாழும் பூண்டி கிருஷ்ணசாமி அவர்களின் இல்லத்தில் நடக்கும் இந்தத் திருமண விழாவில், நாம் எல்லாம் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்.



தஞ்சையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணனின் சகோதரர் பூண்டி கலைச்செல்வனின் புதல்வி டாக்டர் கலையழகி – டாக்டர் ராம்பாலாஜி ஆகியோரது மணவிழாவை தலைமையேற்று நடத்தி வைத்தார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., சாக்கோட்டை அன்பழகன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

அதிலும் குறிப்பாக, இந்த மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பேற்று, மணவிழாவை நடத்தி வைத்து, அதே நேரத்தில் மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

கழகம் தொடங்கிய நாளிலிருந்து கொரடாச்சேரி பகுதியில் பேரூர் கழகச் செயலாளர் பொறுப்பேற்று, கழகம் நடத்தியிருக்கும் போராட்டங்கள் அனைத்திலும் பங்கெடுத்தவர் நம்முடைய பூண்டியார் அவர்கள்.

### பூண்டி கலைவாணனின் இயக்கப் பணி!

அவருடைய வழியில் இயக்கப் பணியாற்றி, கழகத் தோழர் இல்லங்களில், உள்ளங்களில் சிறப்பான இடத்தைப் பெற்றவர் நம்முடைய கழகத் தீரர் பூண்டி கலைச்செல்வன் அவர்கள்.

அவருடைய அருமைத் தம்பியாக, இன்றைக்கு இந்தத் திருவாரூர் மாவட்டக் கழகப் பொறுப்பேற்றுப் பணியாற்றிக் கொண்டிருக்கும் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் அவர்கள், இன்றைக்கு இந்த மணவிழா நிகழ்ச்சிக்குப் பொறுப்பேற்று இதைச் சிறப்பான வகையில் நடத்திக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு ஆயிரக்கணக்கான குடும்பங்கள், இன்றைக்கு இந்த இயக்கத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கிறது, பணியாற்றிக் கொண்டிருக்கிறது, பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதைத்தான் நம்முடைய தம்பி உதயநிதி அவர்கள்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## ‘நீட்’ மோசடி: தேசிய தேர்வு முகமையை கலைக்க உத்தரவிடக்கோரி

# உச்சநீதிமன்றத்தில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் வழக்கு!

புதுடெல்லி, மே 19 -

நீட் முறைகேடு எதிரொலி தேசிய தேர்வு முகமையை கலைக்க உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சி வழக்கு ஜூன் 21 ஆம் தேதி நடத்த திட்டமிடப்பட்டுள்ள நீட் மறுதேர்வை கணினி முறையில் நடத்த வேண்டும் எனவும் மனுவில் கோரிக்கை தேசிய தேர்வு முகமையை கலைக்க வேண்டும் என ஏற்கனவே ஐக்கிய மருத்துவர் சங்கமும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. நீட் மோசடியில் தேசிய தேர்வு முகமைக்கு பெரும் பங்கு உள்ளதும், N.T.A. அதிகாரிகள் சிண்டிகேட் அமைத்து மோசடி நடத்தியுள்ளதும் சி.பி.ஐ. விசாரணையில் அம்பலமானது.

நீட் கேள்வித்தாள் மோசடியில் தேசிய தேர்வு முகமைக்கு நேரடி தொடர்பு இருப்பது சி.பி.ஐ. விசாரணை மூலம் உறுதியானது.

நீட் முறைகேட்டை தொடர்ந்து கேள்வித்தாள் தயாரிப்பு குழுவை கலைத்து ஒன்றிய அரசு உத்தரவிட்ட நிலையில், தேசிய தேர்வு முகமையை கலைக்க உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

---

## சி.பி.எஸ்.இ. 12ஆம் வகுப்பு

# விடைத்தாள் திருத்தத்தில் பெரும் குளறுபடி!

புதுடெல்லி, மே.9-

சி.பி.எஸ்.இ. 12ம் வகுப்பு விடைத்தாள் திருத்தத்தில் பெரும் குளறுபடி அரங்கேறியுள்ளது அம்பலமாகியுள்ளது.

நடப்பாண்டு சி.பி.எஸ்.இ. 12ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானபோது மதிப்பெண் குறைந்ததாக மாணவர்கள் பலர் புகார் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், விடைத் தாள் ஸ்கேன் செய்யப்பட்டு O.S.M. முறையில் பதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்பட்டன.

இதில் தவறு நடந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. 13 ஆயிரம் விடைத்தாளில் இந்த தவறுகள் நடந்துள்ளது. இதனை ஒன்றிய பள்ளிக் கல்வித்துறை செயலாளர் சஞ்சய் குமார் உறுதி செய்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து மாணவர்கள் தங்களது விடைத்தாள்களை மறு மதிப்பீடு செய்ய கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது. 100 ரூபாய் செலுத்தி விடைத்தாள் பெற்று ஆய்வு செய்யலாம்.

ஒவ்வொரு கேள்விக்கும் 25 ரூபாய் செலுத்தி மறு மதிப்பீட்டுக்கு விண்ணப் பிக்கலாம் என்றும் சி.பி.எஸ்.இ. தெரிவித்துள்ளது.

---

## சமூக ஊடகங்களில் தி.மு.க. மீது அவதூறு பரப்பினால்

# உண்மையைப் போட்டு உடைப்போம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, மே 19 -**

**“சமூக ஊடகங்களில் தி.மு.க. மீது அவதூறு பரப்பினால் உண்மையைப் போட்டு உடைப்போம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள தமது சமூக வலைதளப் பதிவில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-



**தஞ்சைத் தரணியில் அன்புச் சகோதரர் பூண்டி கலைவாணன் அவர்களின் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினேன்.**

**பூண்டி கிருஷ்ணசாமி அவர்கள், பூண்டி கலைச்செல்வன் அவர்கள் எனக் கழகத்துக்காகவே தம் வாழ்வை ஒப்படைத்துக் கொண்ட கழகக் குடும்ப விழா இது!**

### உங்களை நானறிவேன்! என்னை நீங்கள் அறிவீர்கள்!

**சிறிய இடைவெளிக்குப் பிறகு, வெளியூர் வருகிறேன். நேற்று, திருச்சியில் இறங்கியது முதலே கழக உடன்பிறப்புகளும் மக்களும் என்னைக் கண்டதும் வெளிப்படுத்திய உணர்வினை நான் புரிந்து கொண்டேன். உங்களை நானறிவேன். என்னை நீங்கள் அறிவீர்கள். நமக்குள் வார்த்தைகள் தேவையில்லை.**

**ஒரு புதிய அரசு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஆட்சி நடத்த நாம் தொந்தரவாக இருக்கப் போவதில்லை. நடத்தட்டும்!**

**ஆனால், இயலாமையை மறைக்க நம் மேல் அவதூறுகள் கொண்டு தாக்கினால் விளக்கம் அளிப்போம். சமூக ஊடகங்களில் பொய்களைப் பரப்பினால் உண்மையைப் போட்டுடைப்போம் என உடன்பிறப்புகளைக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.